Registered as a Newspaper

ராஜ்கோபால்ஸ்
(தற்காலிக இடம் மாற்றம் மயூராசென்ரர் உட்புறம்)
திருமண வைபவங்களுக்கேற்ற பட்டுப்புடைவைகளைப் பெற்றுக்கொள்ளலாம்.
70, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.

# உதயன்

உண்மை – அஞ்சாமை – நடு நிலைமை

விலை: ரூ. 1-25

சகலவித ஜவுளித்தெரிவுகளுக்கும்
மயூரா சென்ரர்
ஆர். ஜி. பில்டிங்
70, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.

சுடர்: 2 யாழ்ப்பாணம் பிரபவ ஆனி 28 உ ஞாயிற்றுக்கிழமை ஹிஜ்ரி 1407 ஜுல்ஹஜ் பிறை 15 (12 – 07 – 1987) UTHAYAN A LIVELY TAMIL DAILY கதிர் 104

# ஜலண்ட் பிரைட் 3 நாட்களாக காத்து நிற்கிறது

## பூரி கொழும்பு விரைந்தார்

யாழ்ப்பாணம், ஜூலை 12

இந்திய நிவாரணப் பொருள்களை ஏற்றிக் கொண்டு காங்கேசன் துறை முகம் வந்த நாலாவது கப்பலான ஐலண்ட் பிரைட் கடந்த மூன்று நாட்களாக காத்து நிற்கிறது

ஸ்ரீலங்கா கடற்படைக் கப்பல் ஒன்று துறைமுகத்தில் தொடர்ந்து நிலை கொண்டிருப்பதே இதற்குக் காரணம்.

'ஐலண்ட் பிரைட்' கப்பலில் இருந்து பொருள்களை இறக்குவதனை மேற்பார்வை செய்வதற்காக இங்கு வந்திருந்த இந்தியத் தூதரக அதிகாரி திரு. எச். எஸ். பூரி, இந்தமாதம் குறித்து கலந்தாலோசிப்பதற்காகக் கொழும்பு விரைந்தார்.

'ஐலண்ட் பிரைட்' கப்பல் நிவாரணப் பொருள்களை ஏற்றிக் கொண்டு வியாழக் கிழமை காங்கேசன்வந்து சேர்ந்தது.

இறங்கு துறையில் ஸ்ரீலங்கா கப்பல் நிற்பதனால் அது வெளியே காத்து நிற்கவேண்டியதாயிற்று.

'கிரேன்' ஒன்று சிறிது பழுதடைந்திருந்த போதிலும்கப்பல் நேற்று இறங்கு துறைக்குள் வர வாய்ப்பு இருக்கும் என எதிர்பார்க்கப்பட்டது.

ஆனால் ஸ்ரீலங்கா கடற்படைக் கப்பல் அங்கு தொடர்ந்து நிற்கிறது. இந்திய நிவாரணக் கப்பல்கள் கொழும்புக்கு வரவேண்டும் என்று அரசாங்க நாடாளுமன்றக் குழுவில் முன் வைக்கப்பட்ட யோசனை

(4 ஆம் பக்கம் பார்க்க)

## மேலும் 2,000 பேர் சாவகச்சேரி வந்தனர்

### டிறிபேக் கல்லூரியிலும் தஞ்சம்

சாவகச்சேரி, ஜூலை 12

வடமராட்சிப் பகுதியில் இருந்து வெள்ளிக் கிழமையும் 500 குடும்பங்களைச் சேர்ந்த சுமார் 2000 க்கும் அதிகமானோர் சாவகச்சேரிப் பகுதிக்கு லொறிகள் மூலம் வந்து சேர்ந்தனர்.

இவர்களில் ஒரு பகுதியினர் டிறிபேக் கல்லூரியிலும், மகளிர் கல்லூரியிலும் தங்கி உள்ளனர்.

இவர்கள் திக்கம், அல்வாய், பொலிகண்டி, வதிரி, தம்பசெட்டி, கரணவாய், மாலிசந்தி ஆகிய பகுதிகளைச் சேர்ந்தவர்கள்.

வடமராட்சியில்இருந்து இடம் பெயர்ந்தவர்களுக்கு அவசர நிவாரணமாக ஒருவார காலத்துக்கான உணவுப் பொருள்கள் இந்திய நிவாரணஉதவியிலிருந்து வழங்கப்படலாம் என நம்பப்படுகிறது.

அரச நிவாரணம் பெற்றுக்கொடுக்க உதவி அரசாங்க அதிபர் திரு பூ. சுந்தரம்பிள்ளை, அதிகாரிகளுடன் தொடர்பு கொண்டுள்ளார். (இ-31)

## இதுவரை 67 முகாம்களில் இந்திய நிவாரண பொருள் விநியோகம்

யாழ்ப்பாணம், ஜூலை 12

இந்தியஅரசினால் வழங்கப்பட்ட நிவாரணப் பொருள்களின் முதற் கட்ட விநியோகம் ஓரளவு பூர்த்தி அடைந்துள்ளது.

இதன் பிரகாரம் யாழ்ப்பாணம், நல்லூர், கோப்பாய், தெல்லிப்பளை, சண்டிலிப்பாய், உரும்பராய் பகுதிகளில் உள்ள 67 அகதி முகாம்களைச் சேர்ந்த பல்லாயிரக் கணக்கான மக்களுக்கு நிவாரணப் பொருள்கள் இதுவரை வழங்கப்பட்டுள்ளன.

கரவெட்டி, சாவகச்சேரி பகுதிகளில் நிவாரணப் பொருள் வழங்கும் வேலைகள் தொடர்ந்து நடைபெற்று வருகின்றன. (இ-10)

### சுபநேரம்

12-07-1987

ஞாயிற்றுக்கிழமை

சுபநேரம்:- 8.59 முதல் 10 29வரை

ராகுகாலம்:- 4.29 முதல் 5.59 வரை

இவை பகலுக்கும் இரவுக்கும் பொருந்தும்

## எருக்கலைகளுடன் போராடும் சிப்பாய்கள்! பகலும் இரவும் சூடு!!

குருநகர், ஜூலை 12

எருக்கலை மரங்களை இராணுவம் சுட்டுத் தள்ளி வருகிறது.

இது எங்கு நடக்கிறதென்று யோசிக்கின்றீர்களா? வேறெங்கும் இல்லை யாழ்ப்பாணத்தில்தான்.

யாழ்.பொலீஸ் நிலைய பின்பக்கத்தில் கரையோரமாக எருக்கலை மரங்கள் அடர்த்தியாகவும், உயரமாகவும் வளர்ந்துள்ளன.

இப்போது வீசுகின்ற சோளகக் காற்றுக்கு அவை ஆடும் சமயங்களில் 'சென்றி' யில் நிற்கும் இராணுவத்தின் துப்பாக்கிச் சூட்டுக்கு அவை தப்புவதில்லை.

பொலீஸ்நிலைய கடற்கரை வீதிச்'சென்றி' யில் இருந்து இந்த துப்பாக்கிச்சூடு தினமும் நடைபெற்று வருகின்றது. இரவு நேரங்களில் இயந்திரத் துப்பாக்கி பயன்படுத்தப்படுகின்றதாம். (இ)

## வரையறுக்கப்பட்ட இராணுவ நடவடிக்கையாம்

கொழும்பு, ஜூலை 12

வடமராட்சியில் கைப்பற்றப்பட்ட பகுதிகளைத் தொடர்ந்து கட்டுப்பாட்டில் வைத்திருக்க வரையறுக்கப்பட்ட இராணுவ நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

இப்படி அரசு அதிகாரி ஒருவர் கொழும்பில் தெரிவித்தார். (இ-எ)

### முச்சந்தி முரளி



மனிசரைக் சுடுகினம், கட்டடங்களை இடிக்கினம், பொருள்களைசூறையாடுகினம் எண்டு பாத்தா மரங்களுக்கும் எல்லே சுடுகினம் அச்சாணியாற்றை தீர சூரர்கள் .....!

## 2 இளைஞர் சுட்டுக் கொலை

யாழ்ப்பாணம், ஜூலை 12

மட்டக்களப்பு பொன்னங்கேணி, அம்பாறை, திருக்கோவில் பகுதிகளில் நேற்று விசேஷ அதிரடிப்படையினர் நடத்திய தேடுதல் நடவடிக்கையில் இரண்டுஇளைஞர்கள் கொல்லப்பட்டனர் என்று அரசுஅறிவித்துள்ளது. (இ-10)

## துப்பாக்கி பிரயோகம்

யாழ்ப்பாணம் ஜூலை 12

புன்னாலைக்கட்டுவன் பகுதியில் நேற்று இராணுவத்தினர் துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொண்டனர்.

இதனால் இருவர் காயமடைந்து யாழ் ஆஸ்பத்திரியில் சேர்க்கப்பட்டனர்.

இதேவேளை ஹெலிக்கொப்டர் ஒன்றும் இப்பகுதியில் அடிக்கடிசுற்றி வட்டமிட்டதைக் காண முடிந்தது. (இ-10)

## திருமலைக்கு 3 வேட்பாளர் கட்டுப்பணம்

கொழும்பு, ஜூலை 12

திருகோணமலை நாடாளுமன்றத் தொகுதியின் இடைத்தேர்தலில் போட்டியிட இதுவரை மூன்று பேர் கட்டுப்பணம் செலுத்தியுள்ளனர்.

மூவரும் சுயேச்சை வேட்பாளர்களாகப் போட்டியிடவே முன் வந்திருக்கின்றனர். (இ-எ)

## பொதுமக்கள் இருவர் பலி

வடமராட்சி, ஜூலை 12

யாக்கரு இராணுவ முகாமில் இருந்து சிப்பாய்கள் நடத்திய தாக்குதல்கள் காரணமாக பொதுமக்களில் இருவர் கொல்லப்பட்டனர்.

வெள்ளிக்கிழமை இச் சம்பவம் இடம்பெற்றது.

யாக்கரு இராணுவ முகாமில் இருந்து வெளியேற முயன்ற சிப்பாய்களுடன் புலிகள் மோதினர்.

சிப்பாய்கள் முகாமுக்குள் திரும்பிச் சென்று ஆட்டிலறி தாக்குதலும் துப்பாக்கிப் பிரயோகமும் மேற்கொண்டனர்.

அப்போதே வீடுகளில் இருந்த இருவர் கொல்லப்பட்டனர். (இ-160)

## விமன்காமம் மகாவித்தியாலய அதிபரின் மரணம் தொடர்பாக விசாரணை

### கல்வி அமைச்சர் உறுதி

கொழும்பு, ஜூலை 12

விமன்காமம் மகாவித்தியாலய அதிபர் திரு. வி. சிவராசா இராணுவத்தால் சுட்டுக் கொல்லப்பட்ட சம்பவம் தொடர்பாக இரண்டு விசாரணைகள் நடத்தப்படும்.

கல்வி அமைச்சர் ரணில் விக்கிரமசிங்க இப்படித் தெரிவித்தார்.

வடமாகாண பாடசாலை அதிபர்கள் சங்கத் தலைவர் திரு. கே. அருணசலம், சங்கத்தின் சார்பில் கடந்த வியாழக்கிழமை அமைச்சரை அவரது அலுவலகத்தில் சந்தித்து திரு. சிவராசாவுக்கு நடந்த கொடுமை பற்றி எடுத்துரைத்தார்.

அப்போதே அமைச்சர் இத்தகவலை அவரிடம் வெளியிட்டார்.

திரு. சிவராசாவின் மரணம் சம்பந்தமாக இரண்டு விசாரணைகள் நடத்தப்படும்.

ஒன்று, திணைக்களத்தினால் நடத்தப்படும்.

மற்றது, இராணுவத்

(4ஆம் பக்கம் பார்க்க)

## ஜே. வி. பி. முக்கிய பிரமுகர்கைது!

கொழும்பு, ஜூலை 12

கொழும்பின் சுற்றுப்புற நகரம் ஒன்றில் வைத்து ஜே.வி.பி யின் முக்கிய பிரமுகர் ஒருவர் கைது செய்யப்பட்டதாகப் பொலீஸ் வட்டாரங்கள் தெரிவித்தன.

இவர் 1971 கிளர்ச்சியில் முக்கிய பங்கு வகித்தவர் என அடையாளம் காணப்பட்டுள்ளதாம்.

இவருடன் சேர்த்துக் கைக்குண்டு உற்பத்தி செய்வதில் பயிற்சி பெற்ற இரண்டு யுவதிகளும் கைது செய்யப்பட்டதாக அறிவிக்கப்பட்டது. (அ)

# இராணுவம் தற்காலிகமாகவே பாடசாலைகளில் தங்கியுள்ளது

## முதலில் ஹாட்லியிலிருந்தே வெளியேற்றப்படும்

## தம்மை சந்தித்த அதிபர் சங்க தலைவரிடம் ரணில்

கொழும்பு, ஜூலை 12

இராணுவம் தற்காலிகமாகவே பாடசாலைகளில்நிலைகொண்டுள்ளது.

முதலில் ஹாட்லிக் கல்லூரியில்இருந்து இராணுவத்தை அப்புறப்படுத்த நடவடிக்கை எடுப்பேன்.

வடமாகாண அதிபர்கள் சங்கத்தின் சார்பில் அதன் தலைவர் திரு. கே. அருணசலம் கடந்த வியாழன் கல்வி அமைச்சர் திரு.ரணில் விக்கிரமசிங்காவை அவரின் அலுவலகத்தில் சந்தித்தார்.

அப்போதே கல்வி அமைச்சர் மேற்கண்ட உறுதி மொழியை வழங்கினார்.

வடமாகாணத்தில் அண்மைக்கால நடவடிக்கைகளினால் கல்வித் துறைக்கு ஏற்பட்டுள்ள பாதகமான நிலையை திரு. அருணசலம் அமைச்சருக்குஎடுத்துச் சொன்னதுடன் அது சம்பந்தமான மகஜர் ஒன்றையும் சமர்ப்பித்தார்.

அமைச்சர் பதிலளிக்கையில் சொன்னதாவது;

வடமராட்சி இராணுவ நடவடிக்கையின் போது கைதானவர்களில் மாணவர்கள் சம்பந்தப்பட்ட விசாரணைகளை முதலில் முடித்து அவர்களை விடுவிக்க நடவடிக்கை எடுப்பேன்.

இது சம்பந்தமாக நான் பாதுகாப்பு அமைச்சுடன் தொடர்பு கொள்வேன்.

இராணுவம் தற்காலிகமாகத் தான் பாடசாலைகளில் தங்கி உள்ளது. எவ்வளவு விரைவில் வெளியேற முடியுமோ அவ்வளவு விரைவில் இராணுவம் பாடசாலைகளை விட்டு வெளியேறி விடும்.

முதலில் பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரியில் இருந்து இராணுவத்தைவெளியேற்றுவது குறித்து நான் கவனம் செலுத்துவேன். வெளியேறிய பின்னர் அப் பாடசாலையில் திருத்த வேலைகளை மேற்கொள்ள உதவுவேன்.

ஜீ.சி.ஈ. உயர்தரப் பரீட்சை எக்காரணம் கொண்டும் ஒத்திவைக்கப்படமாட்டாது.

ஆனால் பரீட்சை எடுக்கத் தவறும் வடமராட்சி மாணவர்களுக்கு இன்னொரு சந்தர்ப்பம் வழங்கப்படும்.

இப்படி அமைச்சர், அதிபர்கள் சங்கத் தலைவர் திரு. அருணசலத்திடம் தெரிவித்தார். (இ-எ)

(4ஆம் பக்கமும் பார்க்க)

## சிறுவனை பதம் பார்த்த "டம் டம்" சூடு!

யாழ்ப்பாணம், ஜூலை 12

யாழ்-கோட்டை முகாமில் இருந்து நேற்று தீர்க்கப்பட்ட டம்...டம... துப்பாக்கி வேட்டினால் சிறுவன் ஒருவன் காயமடைந்தான்.

அன்ரன் டெலா என்ற சிறுவனே காயமடைந்தவராவார். ஒரு குறிப்பிட்ட தூரம் வந்தவுடன் வெடிப்பதே "டம் டம் ரவுண்ட்ஸ்" என்று அழைக்கப்படும் வேட்டு ஆகும்.

ஆஸ்பத்திரி வீதியில் முலைவைச்சந்தியில் இருக்கும் ரயில்பாதை அருகே உள்ள வீடு ஒன்றில் நின்ற சமயம் சிறுவனுக்கு காயம் ஏற்பட்டது. (இ-10)

## ஆஸியில் தொழிற்கட்சி மீண்டும் வெற்றி

சிட்னி, ஜூலை 12

ஆஸ்திரேலிய நாடாளுமன்றத் தேர்தலில் பிரதமர் பொப்ஹோக் தலைமையிலான தொழில் கட்சி மீண்டும் ஆட்சியைக் கைப்பற்றியது.

ஆஸ்திரேலியாவின் சரித்திரத்தில் ஆட்சியில் இருந்த ஒரு கட்சி தொடர்ந்து மூன்றாவது தடவையாகப் பதவிக்கு வந்தது இதுவே முதல் முறையாகும். எதிர்க்கட்சித் தலைவரான திரு. ஜோன் ஹார்ட் தோல்வியை ஒப்புக்கொண்டார்.

ஆஸ்திரேலிய நாடாளுமன்றத்தின் இரண்டு சபைகளுக்குமான பொதுத்தேர்தல் நேற்று சனிக்கிழமை நடந்தது. (இ-எ)

## இ. காங்கிரஸ் வேட்பாளர் வெங்கட்ராமனை ஆதரிக்க அ. தி. மு. க. முடிவு

சென்னை, ஜூலை 11

இந்திய ஜனாதிபதிதேர்தலில் காங்கிரஸ் வேட்பாளரான திரு. ஆர். வெங்கட்ராமனை ஆதரிப்பது என்று தமிழக ஆளுங்கட்சியான அ. தி. மு.க. முடிவு செய்தது.

முதல்வர் திரு.எம்.ஜி. இராமச்சந்திரன் தலைமையில்இன்று(சனிக்கிழமை) நடந்த கட்சியின் உயர் மட்டக் கூட்டத்தில் பிரஸ்தாப முடிவு மேற்கொள்ளப்பட்டது.

உடல்நலம் குன்றி இருப்பதாக அண்மையில் அறிவிக்கப்பட்ட பின்னர் எம். ஜி. ஆர். கலந்துகொண்ட முதலாவதுநிகழ்ச்சி இதுவாகும்.

இன்னும் இரண்டு மாதங்களில் தமிழக அமைச்சரவையில் பெரும் மாற்றங்கள்செய்யப்படும் என்ற தகவலை முதல்வர் இக்கூட்டத்தில் வெளியிட்டார்.

தாம் சிகிச்சைக்காக அமெரிக்கா போகவேண்டிய அவசியமில்லை என்றும் —

பரிசோதனைக்காகச் செல்வதானால் அது குறித்துப் பின்னர் திகதி நிர்ணயிக்கப்படும் என்றும் — திரு. இராமச்சந்திரன் சொன்னார். (அ)

## நாய்கள் ஊளையிடுகின்றன

வடமராட்சி, ஜூலை 12

வடமராட்சியில் தற்போது பெரும்பாலான வீடுகளில் நாய்களே எஞ்சி இருக்கின்றன.

வீட்டுக்காரர்கள் வெளியேறி இருப்பதால் இந்த நாய்களின் ஊளைச் சத்தம் அப் பகுதிகளை ஆட்கொண்டிருப்பதாக அங்கிருந்து நேற்று வந்தவர்கள் தெரிவித்தனர்.

வீடுகளில் எஞ்சி இருந்த வயோதிபர்களும் தற்போது வெளியேறி வருகிறார்கள். (இ-160)

## ஆந்திராவில் அமைச்சரவை மாற்றம்

ஹைதராபாத், ஜூலை11

ஆந்திர அமைச்சரவையில் திடீர் மாற்றம் செய்யப்பட்டுள்ளது. பட்ஜெட்டுக்கு இரு மணி நேரம் இருந்தபோது இந்த மாற்றம் பற்றிய அறிவிப்பு வெளிவந்தது.

புதிய அமைச்சரவையில் முதலமைச்சர் ராமராவின் மருமகனும் சேர்க்கப்பட்டுள்ளார்.

## ஷெயில்சிங் ராஜீவ் சந்திப்பு

புதுடில்லி, ஜூலை 12

ஜனாதிபதி ஷெயில்சிங்கை பிரதமர் ராஜீவ் காந்தி நேற்று மாலை சந்தித்துப் பேசினார்.

ஜனாதிபதி மாளிகையில் நடந்த இச்சந்திப்பு முப்பத்தைந்து நிமிடங்கள் வரை நீடித்தது.

## அரபாத்துக்கு உலக நீதி தினப் பரிசு

டாக்கா, ஜூலை 11

பலஸ்தீன விடுதலை ஸ்தாபனத் தலைவர் யஸீர் அரபாத்துக்கு 1987 ஆம் ஆண்டுக்கான

(4ஆம் பக்கம் பார்க்க)

இளைய தலைமுறையின் இதயம் கவரும் இன்றைய நாளிதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

★ சின்னஞ்சிறு விளம்பரம் ★

## ரேுனியோ

பாதுகாப்பான சூழ் நிலையில் சகலவிதமான அச்சுவேலைகளையும் சிறந்தமுறையில் செய்து கொள்ளவும்—ரேுனியோ பிரதிகள் நவீன முறையில் செய்துகொள்ளவும் நீங்கள் நாடவேண்டிய ஒரே இடம் தயா அச்சகம், 138, நாவலர் வீதி, யாழ்ப்பாணம். (மனோகராச் சந்திக்கு அருகாமை) (3214)

## விற்பனைக்கு

### அன்பர்களுக்கு ஓர் அறிவிப்பு

எம்மிடம் திருவழிபாட்டுக்குத் தேவையான செபமாலைகள், செப புத்தகங்கள், மெழுகுதிரிகள், படங்கள், வரவணிக்கங்கள் முதலியனவும் "பாதுகாவலன்" இதழும், 'புதிய உலகம்' சஞ்சிகையும், மோட்சப் பாதை செபமாலைத்தியானமும், விற்பனைக்குண்டு. புனித சிந்தாத்திரை மாதா செபமாலை ஸ்ரோர்ஸ், 140, சுருவில் வீதி, கரம்பன், ஊர்காவற்றுறை. (1276)


## நியமனம்

யாழ்ப்பாணம், ஜூலை 12

நெடுந்தீவைச் சேர்ந்த பொதுச் சுகாதாரப் பரிசோதகர் திரு. ம. கணேசன், புங்குடுதீவுப் பகுதிக்கு பதில் சுகாதாரப் பரிசோதகராக நியமிக்கப்பட்டுள்ளார். (இ-எ)

# உங்கள் துயரம் நீங்க முயற்சி எடுப்பேன்

## பூரி அளித்த உறுதி

யாழ்ப்பாணம், ஜூலை 12

இப்பகுதி மக்களின் துன்ப, துயரங்களை நான் நேரில் கண்டும் கேட்டும் உள்ளேன்.

உங்கள் துன்பங்கள் துயரங்கள் நீங்க என்னுலான சகல முயற்சிகளையும் நான் மேற்கொள்வேன்.

புத்தூர் பகுதியில் உள்ள அகதிகள் முகாம்களுக்கு விஜயம் செய்த திரு. பூரி அங்குள்ளவர்களுக்கு இவ்வாறு ஆறுதல் வார்த்தை கூறினூர். கடந்த வெள்ளியன்று அங்கு சென்ற திரு. பூரி சொன்னதாவது:—

நீங்கள் படும் கஷ்டங்களை இந்தியா முழுமையாக அறிந்துகொண்டு தான் இருக்கிறது. நாம் நேரில் பார்த்தவற்றையும் அங்கு விளக்குவோம்.

நீங்கள் எதற்கும் பயப்படத் தேவையில்லை.

—இவ்வாறு அவர் தெரிவித்தார். (உ-10)

# தேசிய சர்வோதய சிரமதான சங்கம்

## யாழ் அகதிகளுக்கு உதவி

யாழ்ப்பாணம், ஜூலை 12

இலங்கை தேசிய சர்வோதய சிரமதான சங்கத்தின் இரண்டாம் கட்ட உதவியாக 4 லொறிகளில் உணவுப் பொருள்கள் (அரிசி, மா, சீனி, பால்மா, தேங்காய்) யாழ் மாவட்டத்துக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளது.

அடுத்த சில தினங்களில் இவைகள் அகதி முகாம்கள் மூலம் மக்களுக்கு விநியோகிக்கப்படும்.

வட மாகாண சர்வோதய வெளிக்கள இயக்குனர் கி சிவசுப்பிரமணியம் இதனைத் தெரிவித்தார்.

வடமராட்சியின் சில பகுதிகள் தென்மராட்சி, வலி மேற்கு, வலி கிழக்கு, வலி வடக்கு ஆகிய இடங்களில் உள்ள அகதிகள் முகாம்கள் பிரதானமாக கவனிக்கப்படும் என்றும் தெரிவிக்கப்படுகிறது.

சென்ற மாதமும் சர்வோதய சிரமதான இயக்கம் 4 லொறிகளில் சுமார் 5 லட்சம் ரூபா பெறுமதியான உணவுப் பொருள்களை அனுப்பி சுமார் 45 அகதிகள் முகாம்களுக்கு பகிர்ந்தளிக்க உதவி செய்தது குறிப்பிடத்தக்கது. (இ)

## வீடுபார்க்கச் சென்றவர் பலி!

கொடிகாமம், ஜூலை 12

கொடிகாமத்திலிருந்து நெல்லியடியிலுள்ள தமது வீடுகளைப் பார்க்கச் சென்றவர்களில் ஒருவர் இராணுவச் சூட்டுக்குப் பலியானூர்.

இச்சம்பவம் கலிகைச் சந்தியில் கடந்த செவ்வாய்க்கிழமை பிற்பகல் இடம்பெற்றது.

இறந்தவரின் சடலம் வண்டி ஒன்றின் மூலம் கொண்டுவரப்பட்டு ஈமக்கிரியைகள் நடைபெற்றன. (இ-75)

பாதிக்கப்பட்ட இடங்களிலிருந்து

# இடம் பெயர்ந்த மக்களுக்கு உடன் நிவாரணம் வழங்கக் கோரிக்கை

யாழ்ப்பாணம், ஜூலை 12

பாதிக்கப்பட்ட பகுதிகளில் இருந்து வெளியேறிய மக்களுக்கு நிவாரணம் விரைவில் வழங்க வேண்டும்.

—இப்படி யாழ் தேசிய கூட்டுறவுச் சபையின் தலைவர் திரு. சி. சிவமகாராசா வேண்டுகோள் விடுத்திருக்கிறுர்.

இந்திய நிவாரணப் பொருள்கள் முதற் கட்டமாக அகதிகள் முகாம்களில் இருக்கும் மக்களுக்கு விநியோகிக்கப்பட்டுவருகின்றன.

அடுத்த கட்டமாக பாதிக்கப்பட்ட பகுதிகளில் இருந்து வெளியேறி தஞ்சம் அடைந்த மக்களுக்கு விரைவாக கிடைக்க வழிசெய்தல் வேண்டும்.

பாதிக்கப்பட்ட பகுதிகளில் இருந்து வெளியேறிய மக்களின் அட்டவணை ஒன்றை பாதிக்கப்பட்ட கிராமங்களின் கிராமசேவையாளர்கள், பிரசைகள் குழுக்கள், செஞ்சிலுவைச்சங்கபிரதிநிதிகள், கூட்டுறவுச்சங்கப்பிரதிநிதிகள் ஆகியோர் அடங்கிய குழு மூலம் தயாரித்து, உதவி அரசாங்க அதிபர் மட்டத்தில் அமைக்கப்பட்ட நிவாரணக் குழுவின் அங்கிகாரத்துடன் அந்தந்தப் பகுதி பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்கள் மூலம் விரைவாகக் கொடுக்க நடவடிக்கை எடுக்கப்படவேண்டும்.

இவ்வாறு அட்டவணை தயாரித்து நிவாரணப் பொருள்கள் வழங்கப்படும்போது தவறுகள் நிகழுவதற்கு இடமிருக்காது.

விரைவாக நிவாரணப் பொருள்கள் பாதிக்கப்பட்டமக்களுக்கு போய்ச்சேரும். இவ்வளவு கஷ்டங்கள் ஏற்பட்ட போதும் அந்தந்தப்பகுதி பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்கள் அத்தியாவசிய உணவுப்பொருள்களை தமது மக்களுக்கு குறைவில்லாது வழங்கி வருவது யாவரும் அறிந்ததே — இப்படி அவர் விடுத்த அறிக்கை ஒன்றில் தெரிவித்திருக்கிறுர். (உ)


## Walk In Interview

We are looking for a Mechanical Engineer with Engineering Degree or equivalent for immediate engagement for our vast expanding Engineering Company.

Please call for an interview on 15th July 1987 at 9-30 a. m. in our Company Office with all your certificates and documents.

Promoters Engineering Company always look for quality

We say it and our customers confirm this.

**Promoters Engineering Company Ltd.**
844, Point Pedro Road,
NALLUR — JAFFNA. (3216)


உள்ளூராட்சித் தேர்தல்

# தமிழரை இடம் பெற வைக்கும் முயற்சி

## பயனளிக்கவில்லை

மட்டக்களப்பு, ஜூலை 12

அம்பாறை மாவட்ட பிரதேச சபைகளுக்கான வேட்பாளர்கள் பட்டியல்களில் தமிழர்களை இடம்பெறச் செய்வதற்கு முஸ்லிம் சிரேஷ்ட அரசியல்வாதிகள் சிலரும் முஸ்லிம் பிரமுகர்கள் சிலரும் எடுத்த முயற்சி பயனளிக்கவில்லை என்று தெரிவிக்கப்படுகிறது.

இம்மாவட்டத்திலுள்ள நிந்தவூர், சம்மாந்துறை, கல்முனை, பொத்துவில் பிரதேச சபைகளில் தமிழர்-முஸ்லிம்கள் இணைந்து சரிநிகராக வாழ்கிருர்கள்.

தமிழர்கள் எவரும் இடம்பெற முன்வராததை அடுத்து மேற்படி சபைத் தேர்தல்களில் முஸ்லிம்கள் மட்டுமே போட்டியிடுகிருர்கள்.

நிந்தவூர், அக்கரைப்பற்று பிரதேச சபைகளுக்கு ஐ தே. க. வை எதிர்த்து தலா இரு சுயேச்சை வேட்பாளர் குழுக்கள் போட்டியிடுகின்றன.

இதில் ஒரு சுயேச்சைக் குழுவை முஸ்லிம் காங்கிரஸ் ஆதரிக்கிறது.

கல்முனை, சம்மாந்துறை, பொத்துவில், அட்டாளைச்சேனை பிரதேச சபைகளுக்குப் போட்டியிடும் ஐ. தே. க. வை. முஸ்லிம் காங்கிரஸ் ஆதரவிலான சுயேச்சைக் குழுக்கள் நேரடியாக எதிர்க்கின்றன.

தமிழருக்குரிய ஆலயடிவேம்பு திருக்கோவில் பிரதேச சபைகளுக்கு எவரும் வேட்புமனு தாக்கல் செய்யவில்லை.

உகன, தெகியத்தகண்டிய, பதியத்தலாவ, நாமலையா பிரதேச சபைகளுக்கு ஐ. தே. க.வை.போட்டியின்றித் தெரிவு செய்யப்பட்டுள்ளது. (இ-21)

தேர்தலை பகிஷ்கரிக்கக் கோரி

# அம்பாறையில் புலிகள் சுவரொட்டி

அம்பாறை, ஜூலை 12

பிரதேச சபைத் தேர்தலை தமிழ் பேசும் மக்கள் அனைவரும் பகிஷ்கரிக்க வேண்டுமென தமிழீழ விடுதலைப் புலிகள் கோரியுள்ளனர்.

அம்பாறை மாவட்டத்திலுள்ள முஸ்லிம் கிராமங்கள் பலவற்றிலும் விடுதலைப் புலிகளின் மேற்படி கோரிக்கை தொடர்பான சுவரொட்டிகள் ஒட்டப்பட்டுள்ளன.

'வேண்டுகோள்' எனும் தலைப்புடன் கூடிய இந்த சுவரொட்டிகளில் பின் வருமாறு தெரிவிக்கப்பட்டுள்ளது

"தமிழ் பேசும் இனத்தின் ஒற்றுமையைக் குலைத்து அவர்களின் இறைமைக்குப் பங்கம் ஏற்படுத்தும் வகையில் பிரசாரம் மேற்கொள்வதற்காக நடத்தப்படும் பிரதேச சபைத் தேர்தல்களை எல்லோரும் பகிஷ்கரிக்க வேண்டும்; மீறினுல் கடும் நடவடிக்கை எடுக்கப்படும்.

– இவ்வாறு அந்தச் சுவரொட்டிகளில் குறிப்பிடப்பட்டுள்ளது.

கல்முனை, காரைதீவு, நிந்தவூர், அக்கரைப்பற்று ஆகிய பகுதிகளில் இந்தச் சுவரொட்டிகள் ஒட்டப்பட்டுள்ளன. (இ-14)

# பிரசைகள் குழுவைக் கண்டதும் 'ஆமி' என்ற 3 வயதுச் சிறுமி!

முள்ளியவளை, ஜூலை 12

வடமராட்சியில் இராணுவக் கெடுபிடிகளை நேரில் அனுபவித்த ஒரு 3 வயதுச் சிறுமி பிரசைகள் குழு உறுப்பினர்களைக் கண்டதும் "ஆமி – ஆமி" எனக் கதறியபடி வீட்டுக்குள் ஓடி ஒளித்துக்கொண்டாள்.

இச்சம்பவம் விசுவமடுவில் உள்ள அகதிகள் தங்கியுள்ள வீடு ஒன்றில் இடம்பெற்றது.

அகதிகளைச் சந்திக்கச்சென்ற காற்சட்டை அணிந்திருந்த முல்லைத்தீவு பிரசைகள் குழுவினருக்கே இந்த மனதை நெகிழவைக்கும் அனுபவம் ஏற்பட்டது.

வடமராட்சி, இடைக்காடு, அச்சுவேலிப் பகுதிகளைச் சேர்ந்த மூவாயிரம் அகதிகள்வரை விசுவமடுவில் தங்கியுள்ளனர்.

ஒரு வீட்டில் நான்கு அல்லது ஐந்து குடும்பங்கள் வரை தங்கியுள்ளன.

பெண்கள் வீடுகளினுள்ளும், ஆண்கள் மரங்களின் கீழும் தங்குகின்றனர்.

இவர்களுக்கான சகல உதவிகளையும் முல்லைத்தீவு பிரசைகள் குழுவினர் செய்து வருகின்றனர்.

அகதியாகவுள்ள அச்சுவேலியைச் சேர்ந்த ஒரு விவசாயி தமது நிலையைக் கூறுகையில் அச்சுவேலியிலுள்ள எமது விளை நிலங்கள் யாவும் அழிக்கப்பட்டுவிட்டன — எம்மால் மீண்டும் அங்கே சென்று வாழ்க்கை நடத்த முடியாது" (இ-ள)

# அடிக்கடி ஹெலிகள் மண்டைதீவில் இறங்கின

## சிப்பாய்கள் தரையிறக்கம்?

யாழ்ப்பாணம், ஜூலை 12

மண்டைதீவு இராணுவமுகாமுக்கு வெள்ளியன்று ஹெலிக்கொப்டர்கள் அடிக்கடி வந்து போய்க்கொண்டிருந்தன.

இதேநேரம் கோட்டை, மண்டைதீவு இராணுவ முகாம்களில் இருந்து ஷெல் தாக்குதல்களும் மேற்கொள்ளப்பட்டன.

ஏற்கனவே விமானம் மூலம் பலாலிக்குக் கொண்டுவரப்பட்ட சிப்பாய்கள் மண்டைதீவு, கோட்டைமுகாம்களுக்கு கொண்டு வரப் பட்டிருக்கலாம் என நம்பப்படுகிறது. (உ-10)

## நாளை முடிவு தெரியும்

கொழும்பு, ஜூலை 12

கொழும்பு வடக்கு தேர்தல் தொகுதிக்கான ஐ தே. க. வேட்பாளர் யார் என்பதை நாளை 13 ஆம் திகதி ஐ.தே.க. காரியக்கமிட்டி தீர்மானிக்கும்.

இப்படி ஐ.தே.க. பொதுச் செயலாளர் நந்தா மத்தியூ ஸ்டோ தெரிவித்தார். (உ-எ)

## பெண் ஊர்காவல் படை

மட்டக்களப்பு, ஜூலை 12

மட்டக்களப்பு — பொலன்னறுவை எல்லையில் உள்ள சிங்களக்கிராமங்களில் பெண்களைக் கொண்ட ஊர்காவல் படைப்பிரிவு ஒன்று அமைக்கப்பட்டுள்ளது.

கடவத்தமடு கிராமத்தில் முதல் தடவையாக இப்பிரிவு ஆரம்பித்து வைக்கப்பட்டு பெண்களுக்கு ஆயுதங்களும் வழங்கப்பட்டுள்ளன. (இ-21)

## அகதிகளுக்கு வீடுகள்

கொடிகாமம், ஜூலை 12

நெல்லியடியில் நடந்த தாக்குதலால் இடம் பெயர்ந்து கொடிகாமம் வந்தடைந்த மக்களுக்கு கொடிகாமம் இளைஞர்களும் பொது மக்களும் இங்குள்ள தென்னந் தோட்டங்களில் சிறு தற்காலிகமான வீடுகளை அமைத்துக் கொடுத்துள்ளனர். (இ- 5)

# கிறிஸ்தவ ஐக்கிய சங்கம் வரணியில்நிவாரணஉதவி

## உலக திருச்சபை கவுன்ஸில் ரூபா ஒரு லட்சம் வழங்கியது

யாழ்ப்பாணம், ஜூலை 12

அகதிகளாக இடம் பெயர்ந்துள்ள தமிழ் மக்களுக்கு உதவுவதற்காக உலக திருச்சபைகளின் கவுன்ஸில் ஒரு லட்சம் ரூபாவை யாழ்ப்பாணம் கிறிஸ்தவ ஐக்கிய சங்கத்திடம் வழங்கியுள்ளது.

வடமராட்சியில் இருந்து வெளியேறி வரணியில் தஞ்சம் அடைந்துள்ள அகதிகளுக்கு இந்நிதி மூலம் மூன்று தினங்களுக்கு உணவுப் பொருள்கள் வழங்கப்படும்.

கடந்த ஞாயிற்றுக்கிழமை இடம் பெற்ற நெல்லியடித் தாக்குதலின்போது இடம் பெயர்ந்து வரணி வந்த அகதிகள் இவர்கள்.

வரணி மகாவித்தியாலயம் உட்பட பல இடங்களில் இவர்கள் தங்கி உள்ளனர்.

நேற்று நடைபெற்ற யாழ்ப்பாணம் கிறிஸ்தவ ஐக்கிய சங்கத்தின் கூட்டத்தில் வரணியிலுள்ள அகதிகளுக்கு உதவுவது தொடர்பான முடிவு எடுக்கப்பட்டது.

திரு. ஜே. ஜி. அரசரத்தினம் கூட்டத்துக்கு தலைமை வகித்தார்.

அகதிகளுக்கு நிவாரண உதவி வழங்குவது தொடர்பான குழு ஒன்றும் அமைக்கப்பட்டுள்ளது.

அருட்திரு எஸ். கருணைராஜா, அருட்திரு எஸ். கே. கதிர்காமர், அருட்திரு ஆனல்ட் ஆகியோர் நிவாரண உதவி வழங்குவது தொடர்பான நடவக்கைகளை மேற்கொள்வார்கள். (இ)

மே மாதத் தாக்குதலின்போது

# இடைக்காடு- பத்தமேனி உயிர் — பொருள் இழப்புகள்

## பிரசைகள் குழு அறிக்கை

அச்சுவேலி, ஜூலை 12

கடந்த மே மாதம் இடைக்காடு – பத்தமேனிப் பகுதிகளில் இடம்பெற்ற இராணுவத் தாக்குதல்களில் 24 பேர்கோரமாகக் கொலை செய்யப்பட்டனர். இரண்டு பேர் பற்றிய தகவல் தெரியவில்லை. நூறுபேர் மட்டில் படுகாயம் அடைந்தனர். பல லட்சம் பெறுமதியான சொத்துக்கள், நகைகள் கொள்ளையடிக்கப்பட்டன.

இடைக்காடு – பத்தமேனிப் பகுதி பிரசைகள் குழு தனது பகுதியில் நிகழ்ந்த சேதங்கள் பற்றித் தயாரித்த விவர அறிக்கையில்மேற்கண்டவாறு தெரிவித்துள்ளது.

காணுமற்போன இருவரும் ஹெலியில் வந்தவர்களால் தூக்கிச் செல்லப்பட்டனரென்று கூறப்படுகின்றது. நான்கு வீடுகள் முற்ருகத் தகர்க்கப்பட்டுள்ளன. இருபத்தைந்துக்கும் மேற்பட்ட வீடுகள் உடைத்துச்சேதப் படுத்தப்பட்டுள்ளன.

பல வர்த்தக நிலையங்கள், சனசமூக நிலையங்கள் சேதப்படுத்தப்பட்டுள்ளன.

பல வீடுகளின் கூரைகள் சேதமடைந்துள்ளன. பல ஏக்கர் பயிர்ச்செய்கை நிலங்கள் முற்ருக நாசப் படுத்தப்பட்டிருப்பது [illegible] பயிர் வகைகள் முற்ருக அழிக்கப்பட்டுள்ளன.

17 ஆலயங்கள் பூசை வழிபாடின்றி சேதப்படுத்தப்பட்ட நிலையில் பூட்டப்பட்டுள்ளன. 6 பாடசாலைகள் செயற்படாமல் மூடப்பட்டுள்ளன.

சேதம் தொடர்பான விவரங்களை உறுதிப்படுத்தக் கூடிய சான்றுகளுடன் தலைவர் திரு. என், இராசேந்திரன் செயலாளர் திரு, க. ஆறுமுகசாமி ஆகியோர் அறிக்கை தயாரித்துள்ளனர். [இ-11]

## காத்தவன் காவிய நூல் வெளியீடு

யாழ்ப்பாணம், ஜூலை 11

கவிஞர் தேவதாசன் எழுதிய காத்தவன் காவிய நூல் வெளியீட்டு விழா இன்று காலை 10-00 மணிக்கு வண. பிதா. எச் ஹில்லறி ஜெபநேசன் தலைமையில் நடைபெறும்.

மேதகு கலாநிதி. வ. தியோகுப்பிள்ளை பிரதம விருந்தினராகக் கலந்து கொள்ளும் இந்த விழாவில் உதவி அரச அதிபர் கே. கோபாலரத்தினம், கவிஞர் காரை சுந்தரம்பிள்ளை, கலாநிதி. அ சண்முகதாஸ், கலாநிதி சி. மௌனகுரு ஆகியோர் உரையாற்றுவார்கள்.

இவ்விழா 657, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் உள்ள தொடர்பகத்தில் நடைபெறும் என்பது குறிப்பிடத்தக்கது. (க)


## தொழிற்பயிற்சி நெறிகள்

உடன் ஆரம்பமாகின்றன

Radio, T. V. Deck வகுப்புக்கள்,
Electrical wiring வகுப்புக்கள்,
Air Condition & Refrigeration வகுப்புகள்,
Motor Mechanism வகுப்புக்கள்,
Motor Winding வகுப்புக்கள்.

**North Ceylon Technical Institute.**
14, சென் பீற்றர் லேன்,
யாழ்ப்பாணம்.

★ குவைத் ★

## பிரயாண ஒழுங்குகள்

LABOURERS உடன் தேவை

- ★ சம்பளம்: 40 K.D
- ★ இலவச தங்குமிடம்
- ★ இலவச உணவு வசதி
- ★ 4 வருட ஒப்பந்தம்
- ★ 2 வருட முதிர்வின் பின் LEAVE வசதி
- ★ திரும்பிச் செல்லும் பிரயாணச் சீட்டு வசதி
- ★ இம்மாத இறுதியில் பிரயாணம்

முக்கிய குறிப்பு:

15 ஆம் திகதிக்கு நேர்முகப் பரீட்சைக்கு அழைத்துச் செல்ல இருப்பதால் உடன் வரவும்.

முன்பு விண்ணப்பம் செய்தவர்கள் PASS PORTS கொடுத்தவர்கள் தலைமை அலுவலக FREE SELECTION இன்னமும் செய்யாத எல்லோரும் உடன் தொடர்பு கொள்ளவும்.

மிகவும் முக்கியம்:

இன்றிலிருந்து யாபேரும் நேரடியாக எம்மிடம் தொடர்புகொள்ளவும். வேறு பிரதிநிதிகள் ஊடாக வரும் விண்ணப்பம் நிராகரிக்கப்படும்.

தலைமைச் செயலகம்:

**Construction & Development Company Ltd.**
37, S. DE.S. JEYASINGHE MAWATHA
NUGEGODA.
Labour Licence No. 96

தொடர்பு:

**V. P Balasubramaniam**
(V. P. BALA)
C/o N. V. PONNUTHURAI
School Lane,
KONDAVIL.


Digitized by Noolaham Foundation noolaham.org | aavanaham.org

### உதய சங்கற்பம்

தன்னைத்தான் உயர்த்துகிறவனெவனும் தாழ்த்தப்படுவான், தன்னைத்தான் தாழ்த்துகின்றவன் எவனோ அவன் உயர்த்தப்படுவான்.

— பைபிள்.

உதயன்

உண்மை - அஞ்சாமை - நடுநிலைமை

இல:- 292/2 நாவலர் வீதி, யாழ்ப்பாணம். தொலைபேசி 24805 22073

12.07.1987 த.பெ.இல: - 23

## உள்ளூராட்சித் தேர்தலில் முஸ்லிம் வேட்பாளர்கள்

தென்னிலங்கையில் பிரதான எதிர்க்கட்சிகள் பகிஷ்கரித்த போதிலும், தமிழ்ப் பகுதிகளில் மக்கள் பகிஷ்கரித்த போதிலும் உள்ளூராட்சித் தேர்தலை நடத்துவதற்கு ஐக்கிய தேசியக் கட்சி அரசாங்கம் ஒற்றைக் காலில் நிற்கிறது. நியமனப் பத்திரங்கள் தாக்கல் செய்யப்பட்டுவிட்டன. அடுத்த மாதம் பதினைந்தாம் திகதிக்கு தேர்தல் நிர்ணயிக்கப்பட்டிருக்கிறது.

எதிர்க்கட்சிகள் தேர்தலைப் பகிஷ்கரிக்கப் போவதாக ஏற்கனவே அறிவித்திருந்த போதிலும், தேர்தல் நடத்தப்படுவது உள்ளூராட்சிச் சபைகள் எல்லாவற்றையும் தம்வசமாக்கி, மக்கள் ஆதரவு தமக்கே உண்டு என்று ஆளுங் கட்சி வெளியில் பீற்றுவதற்கேயாம்.

எதிர்க்கட்சிகள் தேர்தலைப் பகிஷ்கரிக்கப் போவதாக அறிவித்திருக்கவும், அதனை நடத்துவது ஜனநாயகத்தைச் சாகடித்ததற்குச் சமமாகும். ஒரே கட்சி நிர்வாகத்தை ஏற்படுத்த வகுக்கப்பட்ட சூழ்ச்சி. மக்கள் ஆதரவு தமக்கு உண்டு என்று ஆளுங்கட்சி வெளிநாடுகளை ஏமாற்றும் முயற்சி. உள்ளூராட்சிச் சபைகளில் மக்கள் தமது கட்சிக்கு ஆதரவளித்திருப்பதால் பொதுத் தேர்தலை இப்போது நடத்த வேண்டிய அவசியம் இல்லை என்று குதர்க்கம் பேசுவதற்கு ஒரு போலிப் புல . உள்ளூராட்சிச் சபைத் தேர்தலை வெற்றிகரமாக நடத்தி மக்கள் ஆதரவைப் பெற்றுவிட்டதாகப் பிரதமர் பிரமாதப்படுத்த உதவும் காகிதக் சப்பல். இப்போது பல கிளைப் பட்டுள்ள அமைச்சரவையில் பிரதமர் தனது பலத்தை நிறுவிக்காட்டுவதற்கு செய்யும் விளையாட்டு. அவ்வளவுதான்.

இன்று நடத்தும் ஜீவமரணப் போராட்டத்தின் மத்தியில் தமிழ் மக்கள் தேர்தலைப் பற்றி நினைக்கத் தானும் கதியற்றவர்கள். அதை அறிந்திருந்தும் தமிழ்ப் பிரதேசங்களிலும் தேர்தல் நடத்தப் போவதாக அரசாங்கம் அறிவித்தது பெரும் சூழ்ச்சியே.

ஏற்கனவே குழம்பி இருக்கும் குட்டையை மேலும் குழப்பி, பல அசம்பாவிதங்களை உண்டாக்கி, பிரதான போராட்டத்தை நலிவுறச் செய்யும் நயவஞ்சகத் தனமே அது.

திட்டமிட்ட குடியேற்றத்தின் மூலம் சிங்களவர் மயமாக்கப்பட்ட தமிழ்ப் பகுதிகளில் சிங்களவர்களின் நிர்வாகத்தை நிலைநிறுத்தும் பயங்கரமான மறைமுகச் சதி. திருமலை நகர சபைக்கு அந்தக் கதி ஏற்பட்டுவிட்டது உடனடியாகவே புலனாகிறது.

திருமலை போன்ற பகுதிகளைத் தமிழர்கள் தமது தாயகம் என்று உரிமை கொண்டாடுவதைத் தடுக்கும் பெரிய திட்டமிட்ட சதியாகவே தமிழ்ப்பகுதிகளில் தேர்தல் நடத்தப்படுகிறது.

வடக்கு மாகாணத்தில் தமிழர்கள் எவரும் வேட்புமனுத் தாக்கல் செய்யவில்லை. கிழக்கு மாகாணத்திலும் தமிழர் எவரும் அதனை நினைத்தும் பார்க்கவில்லை. முஸ்லிம் மக்களில் ஒரு சிலர் மட்டும் வேட்பாளர்களாக நிற்கிறார்கள். அவர்கள் முழுக்க முழுக்கச் சுயநலமிகளே.

ஆனால் கிழக்கிலங்கை முஸ்லிம் முன்னணி போன்ற பொறுப்புள்ள முஸ்லிம் அரசியல் இயக்கங்கள் நிலைமையை சரியாகப் புரிந்துள்ளமை மகிழ்ச்சி தருவதாகும்.

முஸ்லிம்களும் தமிழர்களைப் போன்ற ஒரு சிறுபான்மையினரே. தமிழர்கள் நடத்தும் போராட்டத்தில் முஸ்லிம்கள் நேரடியாகக் கலந்து கொள்ளாவிட்டாலும் அவர்களின் ஆதரவு உண்டு.

முஸ்லிம்களின் ஆதரவில்லாமல் தமிழர் கோரிக்கைகளும், தமிழர்களின் ஆதரவின்றி முஸ்லிம்களின் கோரிக்கைகளும் கைகூடுவது இலகுவான காரியமன்று.

முஸ்லிம்கள் தேர்தலில் பங்கு கொண்டால் தமிழர் விருப்பத்துக்கு மாறாகப் போவதோடு மட்டுமல்லாமல், இராணுவ அட்டூழியங்களை முஸ்லிம் ஆதரித்ததாகச் சர்வதேச மட்டத்தில் கருதப்படும்.

இவ்வாறு கிழக்கிலங்கை முஸ்லிம் முன்னணியின் அறிக்கை ஒன்று கூறுகிறது.

உள்ளூராட்சிச்சபைத் தேர்தலில் முஸ்லிம்கள் கலந்து கொள்வதால் ஏற்படக் கூடிய ஆபத்துகளையும், பின் விளைவுகளையும் அந்த அறிக்கை தெளிந்த நீரோடைபோலத் தெட்டெனக் காட்டுகிறது.

அவற்றை நன்கு புரிந்துகொண்டு கிழக்கிலங்கை முஸ்லிம் மக்கள் தேர்தலை முற்றாகப் பகிஷ்கரிக்க வேண்டும் அது பல வகைகளாலும் தமிழர்களுக்கும், முஸ்லிம்களுக்கும் நன்மை பயக்கும்.

# நாகாலந்தில் 8 பொலீஸார் கொலையுண்டனர்

### பிரிவினைவாதிகள் தாக்குதல்

மணிப்பூர், ஜூலை 11

தனிநாடு கோரும் நாகாலந்து கிளர்ச்சிக்காரர்கள், மணிப்பூர் மாநிலத்தில் அரசுப் படையின் முகாம் ஒன்றைத் தாக்கி எட்டுப் பொலீஸாரைக் கொன்றனர்.

ஏராளமான வெடி மருந்துகள், ஆயுதங்களை முகாமிலிருந்து கிளர்ச்சிக்காரர்கள் கைப்பற்றிக் கொண்டனர்.

சுமார் 100 கிளர்ச்சிக்காரர்கள் இத் தாக்குதலை நடத்தினர் என்று அறிவிக்கப்பட்டது.

கடந்த வியாழக்கிழமை இரவு இச் சம்பவம் இடம்பெற்றது. (இ—எ)

## வெளி உலகில்

கல்யாணசுந்தரம் விவகாரம்:

### கட்சிக்குக் கட்டுப்பட்டு நடக்கும்படி உத்தரவு

சென்னை, ஜூலை 11

கட்சிக்குக்கட்டுப்பட்டு நடக்கும்படி தமிழ்நாடு கம்யூனிஸ்ட் தலைவர் எம். கல்யாணசுந்தரத்துக்கு உத்தரவிடப் பட்டுள்ளது

இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் மத்திய செயற்குழு இந்த உத்தரவைப் பிறப்பித்துள்ளது.

கம்யூனிஸ்ட் கட்சியின் கிளையில் இருந்து பிரிந்து புதிய பிரிவு ஒன்றை திரு. கல்யாணசுந்தரம் அமைத்திருக்கின்றார்.

புதிய பிரிவும் மத்திய கட்சிக்கு விசுவாசமாக நடக்கும் என்றும் திரு. கல்யாணசுந்தரம் அறிவித்தார்.

இதைத் தொடர்ந்தே கட்சியின் மத்திய செயற்குழு இந்த ஆணையைப் பிறப்பித்துள்ளது.

கட்சிக்கு விசுவாசமாக நடந்துகொள்வது உண்மையானால் புதிய பிரிவைக் கலைத்துவிடும்படி திரு. கல்யாணசுந்தரத்தை மத்திய செயற்குழு கேட்டுள்ளது.

திரு. கல்யாணசுந்தரத்தின் அண்மைக்கால நடவடிக்கைகளை கவனித்து வந்துள்ளோம். இனியும் சகித்துக் கொள்ள முடியாது — இப்படி மத்திய செயற்குழு மேலும் தெரிவித்திருக்கின்றது. (இ—எ)

### தலைமைப் பதவி: சுன்-டு-வாங் துறந்தார்

சோல், ஜூலை 11

தென்கொரிய ஜனாதிபதி சுன்-டு-வாங் ஆளும் ஜனநாயக நீதிக் கட்சியின் தலைமைப்பதவியை ராஜினாமாச் செய்து விட்டார்.

சுதந்திர, சுயேச்சையான ஜனாதிபதித் தேர்தல் ஒன்றை உறுதிப்படுத்து முகமாக தலைவர் பதவியை ராஜினாமாச் செய்து இருப்பதாக ஜனாதிபதி அறிவித்தார்.

ஆளும் கட்சியின் அவசரப் பொதுக் கூட்டத்தில் திரு. சுன்-டு-வாங் இந்த முடிவை அறிவித்தார். (இ-எ)

## சோவியத் யூனியன் மீது அமெரிக்கா குற்றச்சாட்டு

வாஷிங்டன், ஜூலை 11

அணு ஆயுதக்குறைப்புப் பேச்சுக்களில் சோவியத் யூனியன் உண்மையான தீவிரத்துடன் ஈடுபடவில்லை என்று அமெரிக்கா குற்றஞ்சாட்டியிருக்கின்றது.

அமெரிக்காவில் உள்ள சோவியத் தூதருடன் வெளியுறவு அமைச்சர் ஜோர்ஜ் ஷுல்ட்ஸ் பேச்சுக்கள் நடத்திய பின்னர் அறிக்கை ஒன்றை ராஜாங்க அமைச்சு வெளியிட்டது.

அந்த அறிக்கையிலேயே அமெரிக்கா முன் கண்டவாறு குற்றஞ் சுமத்தியிருக்கின்றது.

ஆயுதக் குறைப்புப் பற்றிய பேச்சுக்களின் முன்னேற்றத்தைத் தொடர்ந்து உடன்பாடு ஒன்றை எட்டுவதில் அமெரிக்கா அக்கறை கொண்டுள்ளது.

இதற்காக சோவியத் வெளிநாட்டமைச்சருடன் பேச்சுக்கள் நடத்த அமெரிக்க அமைச்சர் ஷுல்ட்ஸ் முயற்சி எடுத்தும் பலனளிக்கவில்லை.

இது ஆயுதக் குறைப்பு விஷயத்தில முன்னர் காட்டிய தீவிரத்தில் இருந்து சோவியத் யூனியன் பின்னிழுப்பதைக் காட்டுகின்றது.

இப்படி அரசு அறிக்கை தெரிவித்தது. (இ-எ)

ரஷ்யாவுக்கு சட்டவிரோத விற்பனை:

### ஜப்பானிய அரசு அமெரிக்காவிடம் மன்னிப்பு

டோக்கியோ, ஜூலை 11

சட்டவிரோத நவீன தொழில் நுட் பரகசியங்களை ஜப்பானிய நிறுவனம் ஒன்று சோவியத் யூனியனுக்கு விற்ற செயலுக்காக ஜப்பானிய அரசாங்கம் அமெரிக்காவிடம் மன்னிப்புக் கோரத் தீர்மானித்துள்ளது.

அமெரிக்காவுக்கு நேரடியாகச்சென்று மன்னிப்புக் கோர ஜப்பான் அரசு, தனது வர்த்தக அமைச்சர் இஜிமடோமரா என்பவரைப்பணித்துள்ளது.

நவீன தொழில் நுட்ப ரகசியங்களை சோவியத் யூனியனுக்கு ஜப்பானிய ரோஷிபா நிறுவனமே அமெரிக்க செனட்டின் தீர்மானத்தை மீறி விற்றது.

இச்செயலுக்காக இந்த நிறுவனத்தின் உற்பத்திப் பொருள்களை இரண்டு ஆண்டுகளுக்கு அமெரிக்காவுக்குள் வராமல் தடுப்பதற்கு அமெரிக்க செனட் சபை எண்ணியுள்ள தருணத்தில் தான் ஜப்பானிய அரசு மன்னிப்புக் கோருவதாக அறிவித்துள்ளது.

இந்த விற்பனையால் சோவியத் யூனியன் எதிரிகளினால் இலகுவில் கண்டுபிடிக்கப்பட முடியாத நவீன நீர்மூழ்கிக் கப்பல்களைத் தயாரித்துள்ளதாம். (இ—எ)

### மத தீவிரவாதிகளுக்கு மரண தண்டனை

அல்ஜியர்ஸ், ஜூலை 11

ஆட்சியைக் கவிழ்க்கச் சதி செய்த குற்றச்சாட்டுக்கு இலக்கான நான்கு மத தீவிரவாதிகளுக்கு அல்ஜீரிய நீதிமன்றம் மரண தண்டனை விதித்திருக்கின்றது.

மேலும் 200 பேருக்குச் சிறைத்தண்டனை விதிக்கப்பட்டது. (இ—எ)

### தளபதியை பதவி நீக்க ஆர்ப்பாட்டம்

பனாமா, ஜூலை 11

பனாமாவின் ஆயுதப்படைத் தளபதி பதவி விலக்கப்பட வேண்டும் என்று கோரி பொதுமக்கள் பனாமாத் தலைநகரில் பெரும் ஆர்ப்பாட்டத்தில் வெள்ளிக்கிழமையன்று ஈடுபட்டனர்.

ஊழல் குற்றச் சாட்டுக்களுக்கு இலக்கானவர் ஆயுதப்படைத் தளபதி.

பனாமா அரசின் தடை உத்தரவை மீறி மக்கள் ஆர்ப்பாட்டத்தை நடத்தினர். (இ—எ)

### எண்ணெய்க்குதம் மீது தாக்குதல்

மாட்ரிட், ஜூலை 11

பாஸ்க் பிரிவினைவாதிகள் ஸ்பெயினின் தென் பகுதியில் எண்ணெய்க் குதம் ஒன்றைத் தாக்கிச் சேதப்படுத்தினர் இதனால் இரண்டரை லட்சம் கலன் டீஸல் சேதமடைந்தது. (இ—எ)

## விசித்திரம்

முரளியாரே! வாரும், வாரும்!

இண்டைக்கு ஞாயிற்றுக்கிழமை. சந்தைப் பக்கம் போயிருப்பீர்! ஏதாவது விசேஷம் கேள்விப்பட்டியோ?

நான் கனநாளாய் யோசிச்சனான். நீ ஏ. எல். பாஸ் பண்ணிவிட்டியோ அல்லது இரண்டு முண்டோடை நிறுத்தின கேஸோ எண்டு கேக்க வேணும் எண்டு!

இந்தநாளையில பெடியளிட்டை நேருக்கு நேர் கேட்கிறது அவ்வளவு அழகில்லைத் தான். எண்டாலும், நான் கனநாளாய் நினைச்சதை இண்டைக்குக் கேட்டு விட்டேன்!

ஓ, நீ அப்ப நாலு 'எஸ்' காரன். நல்லது. இந்த முறை ஏ. எல். சோதினை 25 ஆம் திகதி தொடங்குது.

எப்பிடி, எங்கடை பெடியள் இந்தமுறை திறமையாய் பாஸ் பண்ணுவாங்கள் எண்டு நீ நினைக்கிறியே!

எனக்கெண்டால் ஐமிச்சம் தான். ஷெல்லடி எண்டும், ஹெலி அடி எண்டும்ஒரே அநியாயம். பிள்ளையள் மனம் தரிச்சுப் படிக்க முடியாத சூழ்நிலை.

எண்டாலும் என்ன ஷெல்லடி, பொம்பர் அடி எண்டாலும் அடுத்த நிமிஷம் ரோட்டிலை ரியூட்டரிக்குப் போற பிள்ளையளைக் காணலாம். சரி. என்னவோ செட்டித்தனமாய்ச் சோதனையைப் பாஸ் பண்ணினால் சரி தான்.

உனக்கு ஒரு சங்கதி தெரியுமோ? இந்த முறை பல்கலைகழக அனுமதியிலை இனவிகிதாசாரப்படி கிடைக்க வேண்டிய "கோட்டா" கூட தமிழ்ப் பிள்ளையளுக்குக் கிடைக்கயில்லையாம்.

காரணம் தமிழ் மாணவற்றை "Performance" மிகக் குறைவு எண்டு கொழும்பிலை பல்கலைக்கழக 'கிராண்ட்'கொமிஷன் வட்டாரங்கள் சொல்லிச்சினமாம்.

அது தான் உண்மையான காரணமோ அல்லது 'அம்மா' அரசாங்க காலத்திலை நடந்த தரப்படுத்தல் இரகசியமாய் நடக்குதோ?

ஆனால் ஒண்டு. எங்கடை பிள்ளையளும் படிக்கிற சூழ்நிலையே இருக்குது? மாணவர்களைப் பிடிச்சுக் கொண்டு போறாங்கள், சித்திரவதை செய்யிறாங்கள். அதுகளைக் கேயிவப்பட்டு மற்றப் பிள்ளையள் படிப்பையும் கருதாமல் வெளிநாடு, வெளிநாடு எண்டு ஓடி விட்டுதுகள்!

இஞ்சை இருக்கிற பிள்ளையளாவது படிக்க ஏலுமே. பள்ளிச்கூடங்களுக்கு மேலே குண்டு போடுறான்கள். அதுகளிலை முகாம் அடிக்கிறான்கள். பிறகு என்னெண்டு பள்ளிக்கூடத்துக்குப் போறது? ஒழுங்காய்ப் படிக்கிறது?

வடமராட்சித் தாக்குதலுக்குப் பிறகு குடாநாட்டிலை மிச்சம் மீதி இருந்த இளம் பிள்ளையளும் வெளிநாடுகளுக்கு ஓடி விட்டான்கள். பிறகு என்னெண்டு பல்கலைக்கழக அனுமதியிலை கிடைக்கக் கூடிய 'கோட்டா'வை யாவது பயன்படுத்திறது.?

★ ★ ★

யாழ்ப்பாணத்திலை இருந்து போன தூது கோஷ்டி ஒண்டு போன கிழமை இளம் மந்திரி ரணில் விக்கிரமசிங்காவைச் சந்திச்சு வடமராட்சியிலையும் ஏனைய இடங்களிலையும் இராணுவம் அழிச்ச பாடசாலைகளின்ரை பட்டியல் ஒண்டைக் குடுத்துதாம். அந்த இளம் மந்திரி பட்டியலைப் பாத்துத் திகைச்சுப் போனாராம். உந்தளவு பாதிப்பா எண்டு மூக்கிலை விரலை வைச்சாராம். பிறகு ஒரு

(4-ம் பக்கம் பார்க்க)

# யார் இந்த மிதிலேஷ்குமார்?

புதுடில்லியிலே ஒரு சிறு பங்களா.

பொக்குவாய் மனிதர் ஒருவர் கதிரையில் அமர்ந்திருக்கின்றார்.

> இந்திய ஜனாதிபதித் தேர்தல் நாளை (13-7-1987) நடைபெறுகிறது.
>
> மூன்று வேட்பாளர்கள் போட்டியிடுகின்றனர்.
>
> இந்திரா காங்கிரஸ் வேட்பாளர் திரு. ஆர். வெங்கட்ராமன்
>
> எதிர்க்கட்சிகளின் வேட்பாளர் திரு. வி. ஆர். கிருஷ்ணஐயர்.
>
> இன்னும் ஒரு வேட்பாளரும் தேர்தலில் போட்டியிடுகின்றார்.
>
> அவர் தான் மிதிலேஷ்குமார். காந்தியவாதி.
>
> அவரைப் பற்றிய சுவாரஸ்யமான தகவல்களைக் கொண்டது இக்குறிப்பு.

அவருக்கு என்று விசேடமாக வழங்கப்பட்ட பங்களா இது.

ஆயுதந் தரித்த காவலர்கள் பங்களா வளவினுள் நடமாடுகின்றனர்.

பொக்குவாய் மனிதரைச் சந்திக்க வருபவர்கள், குண்டுகளைக் கண்டுபிடிக்கும் யந்திரத்திற்கு முன்னால் நிறுத்தப்பட்ட பின்னர் தான் உள்ளே அனுமதிக்கப் படுகின்றார்கள்.

இவ்வளவு முக்கியத்துவம் வாய்ந்த பொக்குவாய் மனிதர் யார்?

அவர் தான் மிதிலேஷ்குமார். வயது 67. காந்தி அடிகளின் சீடர்.

நாளை நடைபெறும் இந்திய ஜனாதிபதி தேர்தலில் போட்டியிடும் மூன்றாவது வேட்பாளர் அவர்.

வேட்பாளரானபின்னர் தான் அவருக்கு பங்களாவும்ஆயுதக் காவலும் வழங்கப்பட்டன.

அவருக்கு ஏன் இவ்வளவு பாதுகாப்பு?

மிதிலேஷ் குமார் சொல்கின்றார்:

'என் மீது பாரதூரமான அக்கறைகொண்ட ஒரு மனிதர் இருக்கிறார் அவர்தான் பிரதமர் ராஜீவ் காந்தி.

'ஜனாதிபதி தேர்தலுக்கு முன்னர் நான் கொல்லப்பட்டு விடக் கூடாது என்பது அவர் கவலை. அதனால் தான் இவ்வளவு பாதுகாப்பு 'எனக்கு இப்பாதுகாப்புத் தேவைஇல்லை.தேர்தலுக்கு முன்னர் நான் இறந்து விட்டால் தேர்தல் ஒத்தி வைக்கப்பட்டு விடும். திரு. ஷெயில்சிங் இன்னும் சிறிது காலம் ஜனாதிபதியாக இருப்பார். பிரதமர் காந்திக்கு இதனால் தொந்தரவு வரும்'—

இப்படிக் கூறும் மிதிலேஷ்குமார், பீஹார் மாநிலத்தைச் சேர்ந்தவர். இவரின் பெயரை வேட்பாளராக முன்மொழிந்து வழிமொழிந்தவர்கள் பீஹார் மாநில சட்டசபை எம். பிக்கள் இருபது பேர்.

★ நீங்கள் எந்தக் கட்சியில் இருக்கின்றீர்கள்?— இப்படி ராய்ட்டர் நிருபர் கேட்டார்.

"நல்ல மனிதர்கள் கட்சி" தான் என் கட்சி. இது அரசியல் கட்சி அல்ல. இது ஒரு சீர்திருத்த இயக்கம். என்னைக் கோமாளி என்று எண்ணுபவர்களிடத்தில் சமூக பிரதிக்ஞை இல்லை. தேர்தலை ஒரு மேடையாக பாவிக்கின்றோம்"—

இப்படிச் சொன்னார் மிதிலேஷ்குமார்.

★ உங்கள் கட்சியில் எவ்வளவு உறுப்பினர்கள் இருக்கின்றார்கள்?

'எவ்வளவு உறுப்பினர்கள் என்ற விவரங்களை வெளியிட முடியாது. எமது கட்சியின் சார்பில் போட்டியிட விரும்புபவர்கள் முதலில் கூற வேண்டியது ஒன்று உண்டு. 'எனக்கு ஒருவரும் வாக்குப்போட வேண்டாம்'— போட்டியிடும் வேட்பாளர் பகிரங்கமாக இதை அறி

(4 ஆம் பக்கம் பார்க்க)

## சமய சந்நிதிகளில்

### சிறப்பாக நடந்தேறிய நயினைத் தேர்

அனலைதீவு, ஜூலை 12

நயினாதீவு நாகபூஷணி அம்மன் ஆலய தேர்த் திருவிழா கடந்த வியாழன் பக்திச் சூழ்நிலையில் இடம்பெற்றது.

பிரச்சினைகள் எதுவுமின்றி கடல் போக்குவரத்துச் சேவைகளை யாத்திரிகர்கள் காலை 7 மணி முதல் மாலை 6 மணி வரை பயன்படுத்தினர்.

ஆயுதங்களுடன் வீதிகளில் கடற்படையினரைக் காணக்கூடியதாக இருந்தது. (உ—எ—18



பொய்யாமொழி

குறள்:

காலாழ் களரில் நரியடும் கண்ணஞ்சா
வேலாள் முகத்த களிறு.

பொருள் :

வேல் ஏந்திய வீரரைக் கோத்தெடுத்த கொம்பு உடைய அஞ்சாத யானையையும், கால் ஆழும் சேற்று நிலத்தில் அகப்பட்ட போது நரிகள் கொன்று விடும்.

## நீதிமானின் வேண்டுதல்

"நீதிமான் செய்யும் ஊக்கமான வேண்டுதல் மிகவும் பெலனுள்ளதாயிருக்கிறது "(யாக் 5;16)

ஒரு சிறிய கிராமத்தில் ஒரு போதகரும் ஒரு சில விசுவாசிகளுமிருந்தார்கள். அந்தக் காலம் மிகவும் வறட்சியாக இருந்தபடியால் போதகர் எல்லோரையும் மழைக்காக ஜெபிக்கும்படி அழைத்தார். எல்லோரும் ஜெபிப்பதற்காக ஒரு வீட்டில் ஒருமனமாகக் கூடினார்கள்.

கிறிஸ்தவர்களுக்கு எதிர்ப்பாயிருந்த ஒரு இயக்கத்தைச் சேர்ந்த

ஞானக்கதிர்

சில வாலிபர்கள் இவர்களைக் கேலி செய்யும் படியாக ஜெபிக்கும் இடத்துக்கு வெளியே நின்று கொண்டு மேகத்தைப் பார்ப்பதும் பரிகாசம் பண்ணுவதுமாக இருந்தார்கள். ஆனால் ஜெபித்த கிறிஸ்தவர்களோ அதை கொஞ்சமும் பொருட்படுத்தாமல் ஜெபத்திலேயே உறுதியாய்த் தரித்திருந்தார்கள்.

வாலிபர் பரிகாசம் செய்து கொண்டிருக்கும் போதே ஒருகரிய மேகம் ஆகாயத்தில் தோன்றியது. சில நிமிடங்களுக்கெல்லாம் மழைகொட்ட ஆரம்பித்தது. ஏறக்குறைய ஐந்து நாட்கள் தொடர்ந்துமழைபெய்தபடியால் அந்த வாலிபரும் தங்கள் இருதயத்தில் குத்துண்டு கிறிஸ்துவுக்கு ஒப்புக் கொடுத்தார்கள்.

ஜெபம் வானத்தைத் திறக்கக் கூடியது



கிறிஸ்து ஞானஸ்நானம் பெற்றுக்கரையேறிய போது வானம் திறவுண்

(4ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

LONDON EXAMS
I. D. P. M. — Parts I & II
A. A. T. — All Stages
I. . B. — all stages
Week end Classes
Commencement 4-7-87
Cantabia Institute
(Shoot of Oxonia, Colombo)
13, Rasavinthodam Lane,
(ஸ்ரான்லி றேட் முடிவுக்கருகாமையில்)
JAFFNA.

# உதயன்

12-07-1987 ஞாயிற்றுக்கிழமை

I. C. M. A. Stage I Weekends
Economics — Mr. S Kathirgamanathan
Business Law — Mr Eugene Marampillai
Accounting — Mr S P Sivapathasundaram
Quantitative Method — Popular Varsity Lecturer
Commencement 4-7-87
Cantabia Institute
(Shoot of Oxonia Colombo)
13, Rasavinthodam Lane
(ஸ்ரான்லி றேட் முடிவுக்கருகாமையில்)
JAFFNA

## வடமராட்சி அகதிகளுக்கு அவர்கள் தங்கியுள்ள இடங்களில் இந்திய நிவாரணப் பொருள்கள்

வடமராட்சி ஜூலை 12

வடமராட்சியில் இருந்து இடம் பெயர்ந்தவர்களுக்கு, அவர்கள் தற்போது தங்கியிருக்கும் உதவி அரச அதிபர் பிரிவுகளில் வைத்து இந்தியநிவாரணப் பொருள்கள் வழங்கப்படும்.

இதற்கான ஒழுங்குகள் இந்திய - யாழ் செஞ்சிலுவைச் சங்கங்கள் மூலம் உதவி அரசாங்க அதிபர்கள் ஊடாகமேற்கொள்ளப்பட்டு வருவதாக யாழ் மாவட்ட செஞ்சிலுவைச் சங்கத் தலைவர் திரு. இ. பாலசுப்பிரமணியம் தெரிவித்தார்.

விண்ணப்பத்தை நிரப்பி தற்போதைய வசிப்பிட கிராம சேவகர் ஊடாக அப்பகுதி உதவி அரசாங்க அதிபர்களுக்கு அனுப்பி வைக்கும்படியும் அப்பகுதியில் உள்ள உதவி அரச அதிபர் பிரிவுகளில் நிவாரணம் சம்பந்தமாக ஏதாவது கஷ்டங்கள் ஏற்படுமானால் யாழ் செஞ்சிலுவைச் சங்கத்தலைமை காரியாலயத்துடன் தொடர்புகொள்ளுமாறும் திரு. பாலசுப்பிரமணியம் கேட்டுக் கொண்டுள்ளார். (இ-160)

## ● தங்கக்கூரை அமைக்கும் வேலை ஆரம்பம்

கொழும்பு ஜூலை12

கண்டி தலதா மாளிகைக்குத் தங்கக் கூரை அமைக்கும்வேலை கடந்த புதன்கிழமை ஆரம்பமானது.

ஒருகோடி ரூபா செலவில் தங்கக்கூரை அமைக்கப்படுகின்றது.

எதிர்வரும் டிசம்பர் 31ஆம் திகதி தங்கக் கூரை பொது மக்கள் பார்வைக்குத் திறந்து வைக்கப்படும். (இ-எ)

## ஸ்ரீலங்கா பிரேரணை தோல்வி

கோலாலம்பூர், ஜூலை 11

இந்திய விமான அத்துமீறலைக் கண்டித்து ஸ்ரீலங்கா அரசுக்குழு கொண்டுவந்த பிரேரணை மனிதாபிமான உதவி இது என்று கூறி பாகிஸ்தான் பிரதிநிதியும் ஸ்ரீலங்காவின்பிரேரணையை எதிர்த்து வாக்களித்தார்.

மலேஷியாவில் அண்மையில் இடம்பெற்ற 'லோ ஏசியா' என்றழைக்கப்படும் சட்ட நிபுணர்கள் மாநாட்டில் ஸ்ரீலங்கா அரசுக்குழு இப்பிரேரணையைக் கொண்டு வந்தது.

பிரேரணையை ஒரு நாடும் ஆதரிக்கவில்லை. சிங்கப்பூர் நடுநிலை வகித்தது.

கோலாலம்பூரில் நடைபெற்ற இந்த மாநாட்டுக்கு இந்தியாவின் மேலதிக சொலிசிட்டர் ஜெனரலான திரு. பாலி நாரிமன் தலைமை வகித்தார். (உ-எ)

## தமிழருடன் சேர்ந்து முஸ்லிம்களும் தேர்தல்களை பகிஷ்கரிக்கவேண்டும்

### முஸ்லிம் முன்னணி அறிக்கை

கொழும்பு, ஜூலை 12

சிறுபான்மையினருக்கு உரிமைகள் கிடைக்கும் வரை தமிழருடன் சேர்ந்து முஸ்லிம்களும் எதிர் வரும் தேர்தல்களைப் பகிஷ்கரிக்க வேண்டும்.

கிழக்கிலங்கை முஸ்லிம் முன்னணித் தலைவர் ஜனுப் எம். ஐ. எம். முஹைறதீன் அறிக்கை மூலம் இந்த வேண்டுகோளை விடுத்திருக்கின்றார்.

உரிமை கோரி வடக்கு, கிழக்கில் தமிழர் போராட்டம் நடத்துகின்றனர்.

இப்போராட்டத்தில் முஸ்லிம்கள் நேரடியாகக் கலந்துகொள்ளவில்லை. என்றாலும் போராட்டத்துக்கு முஸ்லிம்களின் பூரண ஆதரவு உண்டு.

முஸ்லிம் மக்களின் ஆதரவு இல்லாமல் தமிழரும், தமிழர் ஆதரவின்றி முஸ்லிம்களும் தங்கள் கோரிக்கைகளை வென்றெடுக்க முடியாது.

ஒரேமாதிரியான அபிலாஷைகளையும், குறைபாடுகளையும் கொண்ட தமிழ் பேசும் தமிழர், முஸ்லிம்கள் ஒன்றுபட்டால் தான் வாழ்வு உண்டு.

இப்படி அந்த அறிக்கையில் ஜனுப். முஹைறதீன் தெரிவித்திருக்கின்றார். (இ-எ)

## நாளை தீர்த்தோற்சவம்

யாழ்ப்பாணம், ஜூலை 12

மல்லாகம்கோட்டைக்காடு சாளம்பை முருகமூர்த்தி ஆலயத்தில் நாளை திங்கட்கிழமை தீர்த்தோற்சவம் நடைபெறும். இந்த உற்சவம் வருடந்தோறும் ஆனி திருவோணத்தில் நடைபெற்று வருகின்றது. (இ-எ)

## ஊர்காவல் படையை பலப்படுத்த ரூ. 7 கோடி

கொழும்பு, ஜூலை 12

ஊர்காவல் படையைப் பலப்படுத்த ஏழு கோடி ரூபாவைச் செலவுசெய்ய கொழும்பு அரசு தீர்மானித்துள்ளது.

இப்போது ஊர்காவல் படையில் சுமார் 16 ஆயிரம் பேர் பணிபுரிகின்றனர்.

இந்த எண்ணிக்கையை 20 ஆயிரமாக அதிகரிக்கவும் அரசு ஏற்கனவே தீர்மானித்து இருந்தது.

கிழக்கு மாகாணத்திலும் அனுராதபுரம், அம்பாறை, பொலன்னறுவை மாவட்டங்களிலும் ஊர்காவல் படையினர் இயங்கி வருகின்றனர்.

இதனிடையில், தாக்குதல் நடவடிக்கையில் உயிரிழந்த சுமார் 20 ஊர்காவல் படையினரின் குடும்பங்களுக்கு நஷ்டஈடு வழங்கவும் அரசு முடிவு செய்துள்ளது.

அதேநேரத்தில் தாக்குதல்களில் தீரம் காட்டுபவர்களுக்கு பணம் பரிசாக வழங்கவும் பாதுகாப்பு அமைச்சு முடிவு செய்துள்ளது. (இ-எ)

## நீதிமானின்----

டது. (மத் 3:16)

ஜெபம் சிறைச்சாலையை திறக்கக் கூடியது. பேதுருவுக்காக சபையார் ஊக்கமாய் ஜெபித்த போது சிறைச்சாலைக் கதவுகள் திறவுண்டன. (அப் 7:7-1)

ஜெபம் மழையை வருஷிக்கக் கூடியது. எலியாவின் கர்மேல் ஜெபத்தால் மழைகொட்டியது. (யாக் 5:18)

ஜெபம்தேவ தூதர்களை இறக்கக் கூடியது. இயேசுவின் கெத்செமனே ஜெபத்தால் தேவன் இறங்கி அவரைப் பெலப்படுத்தினர். (லூக 22:43) (இ)

## யார் இந்த-----

(3-ம் பக்க தொடர்ச்சி)

விக்க வேண்டும்''—

★ இந்திய ஜனாதிபதியாகத் தெரிவு செய்யப்பட்டால் என்ன செய்வீர்கள்?

'ஜனாதிபதியாக வந்தால் நடைமுறைப்படுத்தக்கூடிய திட்டங்கள் உண்டு'

மதுபாவிப்புக்கு தடைவிதிப்பேன். காபரே டான்ஸ்களுக்கு தடைவிதிப்பேன்.

★ ஜனாதிபதிக்கு இதை எல்லாம் நிறைவேற்ற அதிகாரம் உண்டா?

(காந்தி அடிகளின் பொக்குவாய் புன்னகையை உதிர்த்தபடி) இவற்றை நிறைவேற்றக் கூடிய தார்மீகபலம் என்னிடம் உண்டு'.

'இந்திய மக்களின் இன்னல்களை, துயர்களை, துன்பங்களைத் துடைக்க வந்துள்ள தூதன் நான். என்னை அழித்துவிடும்முயற்சியில் எல்லா அரசியல் கட்சிகளும் ஒன்றுபட்டு ஈடுபடும்'.

'நான் நூறு ஆண்டுகளுக்கு மேல் உயிர் வாழ்வேன், துப்பாக்கிக் குண்டுகள் என்னைத் துளைக்காதவரை''— (இ-எ)

## வித்தாரம் - - -

(3-ம பக்கத்தொடர்ச்சி)

மாதிரி சுதாகரிச்சுக் கொண்டு போர்க் காலம் எண்டா உதுகளைத் தவிர்கிறது கொஞ்சம் கஷ்டம் தான் எண்டு தலைனத் தானே சமாளிச்சுக் கொண்டாராம்! உந்த லட்சணத்திலை மந்திரிமாரும், அரசாங்கமும் இருக்கினம்...! தமிழற்றை அலுவல்கள் தானே, அவைக்கு என்ன அக்கறை?

## தனியார் வைத்திய நிலையங்கள் இலவசச் சிகிச்சை அளிக்க இணங்கினால் இலவச மருந்து!

யாழ்ப்பாணம், ஜூலை 12

நோயாளர்களுக்கு இலவசச் சிகிச்சை அளிக்க தனியார் வைத்திய நிலையங்கள் முன்வந்தால் அதற்கான மருந்து வகைகளை வழங்க யாழ் செஞ்சிலுவைச் சங்கம் தயாராக இருக்கிறது.

இந்திய அரசினால் தருவிக்கப்பட்ட மருந்துப் பொருள்கள் யாழ்ப்பாணம், பருத்தித்துறை, தெல்லிப்பளை வைத்தியசாலைகளுக்கு ஏற்கனவே வழங்கப்பட்டு விட்டன.

தற்போது நோயாளர் எண்ணிக்கை அதிகரித்து வருவதால் இலவசச் சிகிச்சை அளிக்கும்பட்சத்தில் தனியார் வைத்திய நிலையங்களுக்கும் மருந்துப் பொருள்களை வழங்க செஞ்சிலுவைச் சங்கம் தயாராக இருக்கிறது என்று தெரிவிக்கப்படுகிறது. (இ-10)

## ● பெரஹெரா யானைகளும் பரிசோதனை

கொழும்பு, ஜூலை 12

கண்டி எஸல பெரஹெராவில்பங்கு பற்றும சகல யானைகளும் முதலில் மிருகவைத்தியர்களினால் நன்கு பரிசோதிக்கப்படும்.

பாதுகாப்பு நடவடிக்கையின் ஒரு கட்டமாக இது அமையும்.

கண்டி செயலகத்தில் நடந்த மாநாடு ஒன்றில் இப்படித் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

கண்டி பெரஹெரா இம்மாதம் 25ஆம் திகதி ஆரம்பமாகும். (இ-எ)

## அதிபரின்---

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

தினால் நடத்தப்படும்.

அதே நேரத்தில் மரணமடைந்த அதிபர் சிவராசாவின் குடும்பத்துக்கு நிவாரண உதவிகள் வழங்க தாம் நடவடிக்கை எடுப்பதாக அமைச்சர் உறுதியளித்தார்.

## அரபாத்துக்கு . . .

(1ம் பக்கத் தொடர்ச்சி)

உலகநீதித் தினப் பரிசு வழங்கப்பட்டது.

இப்பரிசைப் பெறுவதற்காக அரபாத் பங்களாதேஷ் வந்திருந்தார்.

இந்த பரிசுக்குரிய மற்றைய நபர் கொலை செய்யப்பட்ட முன்னாள் சுவிடிஷ் பிரதமர் பால்மே ஆவார். (இ)

## ஐலண்ட்..

(1 ம் பக்கத் தொடர்ச்சி)

க்கும் ஸ்ரீலங்கா கப்பல் தொடர்ந்து இறங்கு துறையில் நிற்பதற்கும் தொடர்பு இருக்குமோ எனச் சந்தேகிக்கப்படுகிறது.

நிவாரணப் பொருள்களை ஏற்றி வந்த மூன்றுவது கப்பலான [illegible] ஐந்து நாட்கள் வெளியே நின்ற பின்னரே இறங்கு துறைக்கு வரமுடிந்தது. (அ-10)

இப் பத்திரிகை நியூ உதயன் பப்ளிக்கேஷனஸ் (பிறைவேற்) லிமிடெட் ஸ்தாபனத்தாரால், யாழ்ப்பாணம் நாவலர் வீதி, 292/2, இலக்கத்தில் உள்ள அவர்களது அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது. வெளியீட்ட திகதி: 12-07-1987.

Printed and Published by New Uthayan Publications (Pvt) Ltd at 292/2 Navalar Road, Jaffna on Sunday July 12, 1987 Registered as a Newspaper at the General Post Office under number QJ/94/N/87

## வட மாகாணத்தில் பாடசாலைகளுக்கு - மாணவருக்கு ஏற்பட்டுள்ள அவலநிலை

### கல்வி அமைச்சருக்கு மகஜர்

கொழும்பு, ஜூலை 12

இராணுவ நடவடிக்கை காரணமாக வடமாகாண பாடசாலைகளுக்கும் படிக்கும் மாணவர்களுக்கும் ஏற்பட்டுள்ள அவல நிலைமை பற்றி வடமாகாண பாடசாலை அதிபர்கள் சங்கம் கல்வி அமைச்சருக்கு விரிவான மகஜர் ஒன்றைச் சமர்ப்பித்தது.

மகஜரில் கூறப்பட்டிருப்பதாவது;

★ அப்பாவி மாணவர்கள் காரணமின்றி கைது செய்யப்பட்டனர். பின்னர் பூஸா கொண்டு செல்லப்பட்டனர். கைது செய்யப்பட்ட மாணவர் விவரங்கள் அதிபர்கள், பெற்றோர்கள், பொறுப்புள்ளவர்களுக்கு அறிவிக்கப்படவில்லை. பூஸாவில் எவ்வளவு மாணவர்கள் தடுத்து வைக்கப்பட்டிருக்கின்றார்கள் என்பது சரியாக எமக்குத் தெரியாது.

★ விமானங்களில் இருந்து போடப்பட்ட குண்டுகளினாலும் ஹெலிக்கொப்டரில் இருந்து மேற்கொள்ளப்பட்ட துப்பாக்கிப் பிரயோகங்களினாலும் பாடசாலைக் கட்டடங்கள் பாதிக்கப்பட்டுள்ளன.

1. முற்றுகச் சேதம் அடைந்த பாடசாலைகள் வருமாறு;

தொண்டமானாறு மெ. மி. வித்தியாலயம், வல்வெட்டி இந்து தமிழ் கலவன் பாடசாலை, சிதம்பரா கல்லூரி, வல்வெட்டித்துறை ஏ எம்.ரி.எம். பாடசாலை, வல்வை சிவகுரு வித்தியாசாலை.

2. ஒரு பகுதி சேதமடைந்த பாடசாலைகள் வருமாறு;

கரவெட்டி விக்னேஸ்வராக் கல்லூரி, வதிரி புனித இருதயக் கல்லூரி, உடுப்பிட்டி அமெரிக்க மிஷன் பாடசாலை, உடுப்பிட்டி பெண்கள் கல்லூரி, கொட்டடி நமசிவாயம் வித்தியாலயம்.

வேம்படி மகளிர் கல்லூரி, பாரதி வித்தியாலயம், வண்ணை நாவலர் வித்தியாலயம், யாழ் மத்திய கல்லூரி, யாழ் தமிழ் கொன்வன்ட் மகா வித்தியாலயம்.

★ இராணுவம் முகாமிட்டுள்ள பாடசாலைகள் வருமாறு;

புலோலி மெ. மி. த. கலவன் பாடசாலை, யாக்கரை விநாயக வித்தியாசாலை, புலோலி சித்தி விநாயகர் பாடசாலை, வயாவிளான் ம. ம. வித்தியாலயம், சட்டுவன் ஞானோதய வித்தியாலயம்.

★ காங்கேசன்துறை வட்டாரத்தைச் சேர்ந்த ஏழு பாடசாலைகள் புதிய இடங்களுக்கு மாற்றப்பட்டுள்ளன. இராணுவ நடவடிக்கைகள் காரணமாக இவ் வட்டாரத்தில் பல பாடசாலைகள் மூடப்பட்ட நிலையில் உள்ளன.

★ வடமராட்சியில் அகதிகள் தங்கியுள்ள பாடசாலைகள் வருமாறு;

கரவெட்டி விக்னேஸ்வரா வித்தியாலயம், தேவரையாளி இந்துக் கல்லூரி, வதிரி புனித இருதயக் கல்லூரி.

★ பாடசாலைகளை நடத்த முடியாத நிலையில் நாம் உள்ளோம். வீட்டில் இருந்து பாடசாலை வந்து மீண்டும் திரும்பும் வரை மாணவரின் பாதுகாப்பை ஓரளவு கூட உறுதிப்படுத்த முடியாதுள்ளது.

இதனால் பெரும்பாலான மாணவர் இந்தியாவுக்கும் நாட்டின் வேறு பகுதிகளுக்கும் சென்றுவிட்டனர். மாணவர் வரவு மிகவும் குறைந்து உள்ளது.

இப்படி மகஜரில் கூறப்பட்டுள்ளது. (இ-எ)

## தண்ணீரின் மேல் ஆடாமல் அசையாமல் மிதந்து உலக சாதனை!

சென்னை, ஜூலை 12

தண்ணீரின் மேல் ஆடாமல் அசையாமல் மிதந்து உலக சாதனை ஒன்றை தமிழ்நாடு பொலீஸைச் சேர்ந்த திரு. சண்முகம் நிலைநாட்டியிருக்கின்றார்.

இதன் மூலம் கின்னஸ் உலக சாதனைப் புத்தகத்தில் இரண்டாவது முறையாக திரு. சண்முகம் இடம்பெறுகின்றார்.

51 மணித்தியாலங்கள் 10 நிமிடங்கள் தொடர்ந்து ஆடாமல், அசையாமல் தண்ணீரின் மேல் அவர் மிதந்ததன் மூலம் இந்த இரண்டாவது சாதனை நிலைநாட்டப்பட்டுள்ளது.

இச்சாதனை முயற்சியை திரு. சண்முகம் கடந்த வியாழக்கிழமை காலை 9.15 மணிக்கு சென்னை அண்ணா நீச்சல் தடாகத்தில் ஆரம்பித்தார்.

நேற்று சனிக்கிழமை பிற்பகல் 3.20 மணிக்கு சாதனையை நிறைவேற்றி நீச்சல் குளத்தில் இருந்து வெளியே வந்தார்.

இதற்காக முதலமைச்சர் திரு. எம். ஜி. இராமச்சந்திரன் திரு.சண்முகத்திற்கு பதவி உயர்வு வழங்கினர்.

தலைமைக்கான்ஸ்டபிளாக பணியாற்றிய திரு. சண்முகம் இனி சப் இன்ஸ்பெக்டராகப் பணிபுரிவார்.

இதைவிட முதலமைச்சர், முதல் தவணைப் பரிசாக ஐயாயிரம் ரூபாவை திரு. சண்முகத்துக்கு வழங்கினர்.

சாதனையை நிறைவேற்ற ஊக்கமளித்த இந்தியன் வங்கியும் 5 ஆயிரம் ரூபாவை பரிசாக வழங்கியது.

இவரின் முதல் உலகசாதனை நீச்சல் தடாகத்தில் தொடர்ந்து 83 மணித்தியாலங்கள் நீச்சலடித்தது ஆகும்.

இது ஏற்கனவே கின்னஸ் புத்தகத்தில் இடம் பெற்று விட்டது. (இ-எ)

## கால்நடை வளர்ப்பு மூலம் பொருளாதாரத்தை மேம்படுத்த முடியும்

எமது பொருளாதாரத்தை நாம் மேம்படுத்த வேண்டுமானால் வீடுகளில் கால் நடைகள், கோழிகளை வளர்க்க வேண்டும்.

கால்நடை வளர்ப்போர் சங்கத் தலைவர் டாக்டர் எஸ். மோகனதாஸ் இவ்வாறு கூறினார்.

யாழ் பிறவுண் வீதியில் உள்ள கால் நடை காரியாலய மண்டபத்தில் நடைபெற்ற கால் நடை வளர்ப்போர் சங்கக் கூட்டத்துக்குத் தலைமைவகித்துப் பேசுகையில் அவர் இவ்வாறு கூறினர்.

அவர் மேலும் பேசுகையில்;

தற்போது யாழ் மாவட்டத்தில் மிகக் குறைந்தளவே கால் நடைகள், கோழிகள் வளர்க்கப்படுகின்றன. இது மிகவும் கவலைக்குரிய விடயமாகும்.

இதனால் எமது பொருளாதாரமும் பெருமளவு வீழ்ச்சி அடைந்துள்ளது.

கால் நடை வளர்ப்பை ஊக்குவிக்கவே சங்கம் அமைக்கப்பட்டு, சங்கம் மூலம் வெளி மாவட்டங்களிலிருந்து கோழிக் குஞ்சுகளைப் பெற்று விநியோகித்து வருகின்றோம் என்றார். (இ-எ)

## இந்தியா மீண்டும் எதிர்ப்புத் தெரிவிக்கிறது

புதுடில்லி, ஜூலை 11

பாகிஸ்தானுக்கு நவீன ஆயுதங்களை வழங்குவது குறித்து இந்தியா அமெரிக்காவிடம் மீண்டும் எதிர்ப்புத் தெரிவித்து உள்ளது.

இப்படி இந்திய வெளியுறவு அமைச்சர் என். டி திவாரி தெரிவித்தார். [illegible] வெளி விவகார ஆலோசனைக் குழுக் கூட்டத்தில் அமைச்சர் இத் தகவலை வெளியிட்டார். (இ-எ)

## சங்கானையில் 790 குடும்பங்களுக்கு இந்தியநிவாரணஉதவி

சங்கானை, ஜூலை 12

கோப்பாய், பருத்தித்துறை, கரவெட்டி, தெல்லிப்பழை, சண்டிலிப்பாய் ஆகிய உதவி அரசாங்க அதிபர் பிரிவுகளிலிருந்து இடம் பெயர்ந்து சங்கானை சிவப்பிரகாச மகா வித்தியாலயம், சலேசியார் ஆலயம், ஆரம்ப நீதிமன்றக் கட்டடம் ஆகியவற்றில் முகாமிட்டிருக்கும் 790 குடும்பங்களுக்கு வெள்ளிக்கிழமை இந்திய நிவாரணப் பொருள்கள் வழங்கப்பட்டன.

இந்திய செஞ்சிலுவைச் சங்க அதிகாரி நாராயணன் தலைமையில் பொருள்கள் விநியோகிக்கப்பட்டன.

சங்கானை உதவி அரசாங்க அதிபர் திரு. து. வைத்திலிங்கம், கிராம சேவையாளர் திரு. தி. இராசபாலன், சங்கானை கிழக்கு கிராம அபிவிருத்திச் சங்க நிர்வாகிகள் ஆகியோரின் ஒத்துழைப்புடன் சங்கானை பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம் காலை 9 00 மணியில் இருந்து மாலை 5-00 மணி வரை நிவாரணப் பொருள்களை வழங்கியது. (இ-ரி)

பிரயாண ஒழுங்குகள்

● கனடா

கனடா நாட்டிற்கு விசா, பிரயாணச் சீட்டு உடனடியாக ஒழுங்கு செய்து தரப்படும்.

பாஸ்போட், பொண்ட், பிரயாணச் சீட்டுக்கள் இந்தியன் விசா.

நிப்பொன் ரெலி ரவல்ஸ்

2 G, ஸ்ரான்லி வீதி, - - யாழ்ப்பாணம்.

(3217)